# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 7441 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.09.</u>**

**முன்னிலை :** **திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**
**மாநில தகவல் ஆணையர்**

**மனுதாரர் :** **திரு. கோ. மாரிமுத்து,**
**த/பெ. மு. கோபால்,**
**51/2, பஜனை கோயில் தெரு,**
**225, புலிப்பாக்கம் கிராமம் (ம) அஞ்சல்,**
**செங்கற்பட்டு – 603 002.**

**பொது அதிகார அமைப்பு :** **பொதுத் தகவல் அலுவலர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**செங்கல்பட்டு வட்டம்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

**-------**

மனுதாரர் திரு. கோ. மாரிமுத்து மற்றும் திரு. ஜோன்ஸ், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (23.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 25.02.08 அன்று ஒரு சில தகவல்கள் கேட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் மனு செய்துள்ளார். தகவல் கிடைக்காததால் 09.05.08 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 26.03.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (23.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் தன்னுடைய பெயரில் பல மனுக்களும், தமது சகோதர் பெயரில் பல மனுக்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி செய்துள்ளதாக தெரிவித்தார். மனுதாரருக்கு அவ்வப்போது தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர்

தெரிவித்தார். தகவல்கள் அனுப்பப்பட்டதில் ஒரு சில விளக்கங்கள் கேட்டுள்ளதாக மனுதாரர் தெரிவித்தார். மனுதாரரால் கேட்கப்பட்ட தகவல்கள் குறித்தும், மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தகவல்கள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் செட்டில்மென்ட் பதிவேட்டின் நகல் என்று மனுவில் தெரிவித்துள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் செட்டில்மென்ட் பதிவேட்டின் நகல் என்று மனுதாரர் குறிப்பிடுவது 1375–ம் பசலி அதாவது 1958–ம் வருடம் பராமரிக்கப்பட்ட அ–பதிவேட்டின் நகல் என்று தெரிவித்தார். சம்பந்தப்பட்ட பதிவேடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருவதாக விசாரணையில் தெரிய வருகிறது. மனுதாரருக்கு தகவல் தரப்பட வேண்டும் என்ற கருத்தில் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

> மனுதாரர் கேட்டுள்ள புல எண்களுக்கு 1375–ம் பசலிக்கான அ–பதிவேட்டின் நகல்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளிலிருந்து பெற்று இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.09.09 தமிழ்நாடு தகவல் ஆணையம்
ஆணையத்தின் ஆணைப்படி

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 7441/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. கோ. மாரிமுத்து,
த/பெ. மு. கோபால்,
51/2, பஜனை கோயில் தெரு,
225, புலிப்பாக்கம் கிராமம் (ம) அஞ்சல்,
செங்கற்பட்டு – 603 002.